# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008, பெப்புருவரி மாதம் 29 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்**

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஒ. 67/2007

## 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டமானது, அந்தச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் (சமூகப் பொறுப்புடைமை அறவீட்டு விதிப்பனவு) 2 ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஆ) 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2007, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 1 சதவீதப்படியும் ; அத்துடன்

(இ) 2008, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு 1.5 சதவீதப்படியும் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான இரண்டாவது காப்புவாசகத்தினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன் மூலமும் :-

"ஆயின் மேலும் -

(அ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், வருமானவரியின்மீது இச்சட்டத்தின்

2-PL 002792 -1,400 (2008/02)

இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடற்படற்பாலதான சமூகப் பொறுப் புடைமை அறவீடானது 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2006, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதி தொடர்பில் 0.25 சதவீதப்படி கணிப் பிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், வருமானவரியின்மீது இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடற்படற்பாலதான சமூகப் பொறுப் புடைமை அறவீடானது –

(i) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2008, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதி தொடர்பில் 1.0 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(ii) 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப்பகுதி தொடர்பில் 1.5 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினை உடனடுத் துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவு உட்பகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறு தலும் வேண்டும்.

*"இப்பாகத் திற்கான பொருள்கோடல்.*

6அ. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக –

"கம்பெனி" என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் உள்ளவாறு அதேபொரு ளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் அட்ட வணையினைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் அட்டவணையானது அதன் 5 ஆம் விடயத்திற்கு பின்வரும் புதிய விடயத்தைப் பதிலிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"5. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டம் (அத்தியாங்கள் XVI, XVII, XXI மற்றும் பிரிவுகள் 36, 65 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர) 2006, ஏப்பிறல் 1 ஆம் திகதி தொடங்குவதும் 2008, மாச்சு 31 ஆம் திகதி முடிவடைவதுமான காலப்பகுதிக்கு அத்தகைய சட்டம் ஏற்புடையதாகுகின்றவாறாக அந்தளவில் ;

6. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XVI, XVII, XXI மற்றும் பிரிவுகள் 36, 65 என்பவற்றின் ஏற்பாடுகள் தவிர, 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு ஏதேனும் கம்பெனிக்கு அத்தகைய சட்டம் ஏற்புடையதாகுகின்ற வாறாக அந்தளவில்.".

**5**. கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன் -

*கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.*

(அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கும் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2008, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கும் செய்யப்பட்ட திருத்தமும் இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால், முதலாவது அட் டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தமும் 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்